# கொழும்புப் பல்கலைக்கழகம், இலங்கை

## சட்ட பீடம்

## சட்டமாணிப் பரீட்சை – ஆண்டு IV, 2017/2018

## தொழிற் சட்டம்

(மூன்று மணித்தியாலம்)

வினாக்களின் மொத்த எண்ணிக்கை: 07

ஏதேனும் நான்கு (04) வினாக்களுக்கு மட்டும் விடை தருக.

(தெளிவற்ற கையெழுத்திற்குப் புள்ளிகள் குறைக்கப்படும்.)

1. சுதந்திர ஒப்பந்தக்காரர்களின் எண்ணிக்கையின் அதிகரிப்பானது, சட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள சமூகப் பாதுகாப்பின் பல விடயங்கள் வேலை உலகிற்குப் பிரயோகமாகவில்லை என ஆகின்றது.

   (அ) தரப்பட்ட கூற்றில் எது உட்கிடையாக உள்ளது என்பதனை உமது சொந்த சொற்களில் விளக்குக.

   (ஆ) இக் கூற்றுடன் நீர் உடன்படுகின்றீரா? காரணங்களைத் தருக.

   ஊழிய வடிவத்தில் தோற்றம் பெறும் போக்குகளுக்கும் இலங்கையில் ஊழிய உறவிற்கு ஏற்புடையதான சமூக பாதுகாப்பு விடயங்களுக்கும் விசேட வலியுறுத்தல் தந்து உமது விடையை விளக்குக.

2. நீரோகா ஹொஸ்பிட்டல்ஸ் (பிறைவேற்) லிமிற்றெட் என்பது நாடெங்கும் பல கிளைகளைக் கொண்டுள்ள நன்கு தாபிதமான வைத்தியசாலைகளின் தொடரொன்றாகும். அதன் முகாமைத்துவ சபையானது மருத்துவ மற்றும் நிருவாக ஆட்களைக் கொண்டுள்ளது. எல்லா நியமனங்களும் சபையினால் செய்யப்படுகின்றது என்பதுடன் அந்த வைத்தியசாலையின் ஒவ்வொரு மருத்துவ உத்தியோகத்தரும் அவர் வதிவிட அல்லது ஆலோசக நிபுணத்துவ, முழுநேர அல்லது பகுதிநேர உத்தியோகத்தரானாலும் அந்த சபையினால் நியமிக்கப்படுகின்றனர். மருந்தகத்திலுள்ள வதிவிட மருத்துவ உத்தியோகத்தரொருவர் தொலைபேசியிலான அறிவுறுத்தலைத் தவறாக விளங்கி ஆபத்தான மருந்தொன்றை (புறொக்கெயினுக்குப் பதிலாக கொக்கெயினினை) அனுப்பியதுடன் சத்திரசிகிச்சை நிபுணர் நோயாளி ஒருவருக்கு அதனைப் பயன்படுத்தியதுடன் அது பராதூரமான விளைவுகளை ஏற்படுத்தியுள்ளது. அந்த சத்திரசிகிச்சை நிபுணரானவர் அவர்களுடைய பயிற்சிக் காலத்திற்கான பயிற்சியைப் பெறுகின்ற இரண்டு மருத்துவ மாணவர்களால் உதவியளிக்கப்பட்டிருந்தார்.

   (அ) பின்வருவன தொடர்பில் தொழிற் பரப்பில் எழுகின்ற நீரோகா ஹொஸ்பிட்டல்ஸ் (பிறைவேற்) லிமிற்றெட்டின் பொறுப்புடைமையை ஆராய்க –

(i) மருந்தகத்திலுள்ள வதிவிட மருத்துவ உத்தியோகத்தர்;

(ii) அந்த மருந்தைப் பயன்படுத்திய சத்திரசிகிச்சை நிபுணர்;

(iii) சத்திர சிகிச்சை நிலையத்தில் அந்த சத்திரசிகிச்சை நிபுணருக்கு உதவியளித்த பயிற்சி பெறுகின்ற அந்த இரண்டு மருத்துவ மாணவர்கள்.

தொழிற் சட்டப்பரப்பில் தொழில்தருநரின் பொறுப்புடைமையைத் தீர்மானிப்பதில் நீதிமன்றங்கள் பயன்படுத்தும் உரைகற்கள் மீது உமது விசேட கவனத்தைச் செலுத்துமாறு நீர் கடுமையாக ஆலோசனையளிக்கப்படுகின்றீர்.

(ஆ) அந்த சத்திரசிகிச்சையை மேற்கொண்ட அந்த சத்திரசிகிச்சை நிபுணர் அந்த வைத்தியசாலைக்குத் தன்னிச்சையாகச் செல்வதுடன் ஏனைய வைத்திய சாலைகளில் வேலை செய்வதற்கான சுதந்திரத்தைக் கொண்டுள்ள வருகைதரு ஆலோசக நிபுணரொருவராக இருந்திருந்தால் உமது விடை வேறுபடுமா?

3. காயத்திரி காமன்ற்ஸ் லிமிற்றெட் என்பது கண்டியிலுள்ள அதனுடைய தொழிற்சாலையில் 350 பெண் வேலையாட்களை வேலைக்கு அமர்த்துகின்றது. அக் கம்பனியானது சாக்ஸன் என்பவனை அதனது தொழிற்சாலையில் மேற்பார்வையாளரொருவராக ஊழியத்திலமர்த்தியது. “எமது உடலமைப்பைப் பற்றிய பாலியல் அம்சங்களுள்ள பகிடியொன்றை திரு. சாக்ஸன் செய்துள்ளார்” என்ற முறைப்பாடொன்றை மூன்று பெண் வேலையாட்களிடமிருந்து அக் கம்பனியின் முகாமைத்துவமானது பெற்றது. பிறழ்நடத்தைக்காக அந்த முகாமைத்துமானது சாக்ஸனின் சேவைகளை முடிவுறுத்தியது. அக் கம்பனியின் மனித வள முகாமையாளரானவர் அக் கம்பனிக்காக சாக்ஸன் பதினைந்து வருடங்கள் வரை வேலை செய்துள்ளார் என்பதுடன், அக் கம்பனியின் வியாபாரத்தை முன்னேற்றியுள்ளார் என்றார். அந்த முகாமையாளர் அவருக்கு எதிராக பிறழ்நடத்தை பற்றிய வேறு எந்த முறைப்பாடுகளும் இல்லை என்றார்.

சாக்ஸன் தொழில் நியாய சபையொன்றிற்கு விண்ணப்பமொன்றைச் செய்ததுடன் விசாரணையின் போது “அந்த மூன்று பெண் பிள்ளைகளும் கட்டையான பாவாடைகளை அணிந்து வந்ததை நான் கண்ட போது பாலியல் அம்சங்களைக் கொண்டுள்ள பகிடியொன்றை நான் செய்ததை நான் ஏற்றுக் கொள்கின்றேன்” என தெரிவித்தார். அந்த நியாயசபை முன்னர் “அந்த பிறழ்நடத்தையானது தன்மையில் பாரதூரமானதாகவோ அல்லது வழமையானதாகவோ இல்லாததால் வேலைமுடிவுறுத்தலானது நியாயப்படுத்தப்பட முடியாதது. வேலை முடிவுறுத்தல் நியாயப்படுத்தப்பட்டாலும் கூட, நியாமும் ஒப்புரவும் அடிப்படையில் நான் இழப்பீட்டிற்கு உரித்துடையவன்” என அவர் மேலும் கோரினார்.

அந்த விண்ணப்பத்தைக் கேட்கின்ற அந்த தொழில் நியாயசபையின் தலைவராக நீர் இருந்தால், அந்த கட்டளையை எவ்வாறு நீர் எழுதுவீர்? உமது விடைக்கான காரணங்களைத் தருக.

4. ஏபிசி கம்பனி லிமிற்றெட் ஆனது மேல் மற்றும் தென் மாகாணங்களில் பல கிளைகளைக் கொண்டுள்ளது. அக் கம்பனியானது 01-01-2010 என தேதியிடப்பட்ட நியமனக் கடிதமொன்றின் மூலம் அதனது முகாமைத்துவ இயக்குனராக X என்பவரை நியமித்தது. X ஆனவர் வியாபார முகாமைத்துவத்தில் கணிசமானளவு கடந்த கால அனுபவத்தைக் கொண்டுள்ளார். 01-01-2012 அன்று, ஏபிசி கம்பனி லிமிற்றெட் ஆனது அக் கம்பனியின் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தர் பதவிக்கான சேவை ஒப்பந்தமொன்றின் விதிமுறையான உடன்படிக்கையொன்றைச் செய்யுமாறு அவரை வேண்டியது. அந்த நியமனக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருந்த ஊழிய நியதி நிபந்தனைகளுள் அவருடைய சம்பளமானது மாதமொன்றிற்கு ரூபா 250,000/= ஆகக் குறிப்பிடப்பட்டிருந்ததுடன் அவர் அந்தப் பதவியை ஏற்பதன் மூலம் இழக்க வேண்டியிருந்த ஓய்வூதியத்திற்குப் பதிலாக மாதாந்த அலவன்ஸ் ஒன்றைச் செலுத்துவதற்கான வாசகமொன்றும் உள்ளடக்கப்பட்டு இருந்தது.

X ஆனவர் அந்தப் பதவியிலிருந்து 30-12-2016 இலிருந்து நடைமுறைக்கு வரும்வகையில் இராஜினாமா செய்தார். X இனால் கேட்கப்பட்ட வினாவொன்றிற்கான பதிலாக, முகாமைத்துவ இயக்குனரொருவராக X ஆனவர் வேலையாட்களின் விசேட வகையொன்றைச் சேர்ந்தவராக இருந்ததுடன் நடைமுறையிலுள்ள சட்டத்தின் கீழ் அவருடைய பணிக்கொடையைச் செலுத்த கம்பனி பொறுப்புடையதல்ல என ஏபிசி கம்பனியானது வாதிடுகின்றது.

அதன் பின்னர், X ஆனவர் தனது சேவைநலனுக்கான கட்டளையொன்றைப் பெறுவதற்காக தொழில் ஆணையாளருக்கு விண்ணப்பமொன்றைச் செய்தார்.

X இனுடைய அந்த விண்ணப்பத்தைக் கேட்கின்ற தொழில் ஆணையாளர் நாயகமாக உம்மைக் கருதுக.

(அ) (i) ஆணையாளர் பின்பற்ற வேண்டிய நடபடிமுறையை விளக்குக.

(ii) X ஆனவர் தான் கோரிய வேலைமுடிவுறுத்தல் நலனைப் பெற உரித்துடையவரா?

(iii) அவ்வாறானால், X இற்கு ஏற்புடைய சட்ட ஏற்பாடுகளை விளக்குக.

(iv) அந்த நலன் கணிப்பிடப்படும் முறையை விளக்குவதுடன் பொருத்தமான சட்ட ஏற்பாடுகளுக்கமைய அந்த நலனின் அளவு.

(ஆ) அக் கம்பனியானது X ஆனவர் அங்கீகரிக்கப்படாத தனிப்பட்ட வெளிநாட்டு தொலைபேசி அழைப்புகளை ரூபா 200,000/= இற்கு அதிகமான அளவிற்கு எடுத்துள்ளதாகவும் கம்பனிக்கு இழப்பொன்று ஏற்படுத்தப்பட்டுள்ளதாகவும் மேலும் தெரிவிக்கின்றது. X இனால் உமக்குச் செய்யப்பட்ட விண்ணப்பம் தொடர்பில் நீர் செய்யவுள்ள கட்டளைக்கு அக் கோரிக்கையானது ஏதேனும் வகையில் ஏற்புடையதா என விளக்குக.

5. பின்வருவன தொடர்பில் சட்ட அபிப்பிராயமொன்றை எழுதுக:

(அ) இலங்கையில் கைத்தொழில் அமைதியைப் பேணுவதற்கான பொறிமுறையொன்றாக கைத்தொழில் நடுத்தீர்ப்பின் பயனுறுதியாந்தன்மை.

(ஆ) இலங்கையில் ஊழியத்தில் பாரபட்சமின்மையை முன்னேற்றுவதற்கான பதிலளிப்புகளின் பயனுறுதியாந்தன்மை.

6. தேசிய மனித வள முகாமைத்துவ சட்ட மாநாடொன்றில், தொழில்தருநர்களின் தாபனமொன்றைப் பிரதிநிதித்துவஞ் செய்கின்ற பேச்சாளரொருவர் பின்வருமாறு குறிப்பிட்டார்:

"இலங்கையின் தொழில் நியதிச்சட்டங்கள் தொழிற்சங்கவியலாளர்களுக்கும் தொழிற்சங்கங்களுக்கும் நியாயமற்ற வகையில் சாதகமாகவுள்ள ஏற்பாடுகளைக் கொண்டுள்ளன. இது இலங்கையில் முதலீட்டை ஊக்குவிப்பதைப் பாதிக்கின்றது..."

சர்வதேச சாசனங்களின் கோட்பாடுகளினதும் இலங்கையின் தொழில் நியதிச்சட்டங்களின் ஏற்பாடுகளினதும் பின்னணியில் மேலுள்ள கூற்று மீது கருத்துரை செய்க.

7. ரூனா-ஷியர் கம்பனி லிமிற்றெட் என்பது மீன்பிடி கருவி தயாரிப்பில் ஈடுபடுவதற்காக வெளிநாட்டு ஒத்துழைப்புடன் தாபிக்கப்படுகின்றது. அந்த வெளிநாட்டு ஒத்துழைப்பாளர் மூலப்பொருட்களை விநியோகிப்பதற்கும் உற்பத்திப் பொருட்களைக் கொள்வனவு செய்வதற்கும் உடன்பட்டுள்ளார். பல வருட வியாபாரத்தின் பின்னர், அந்த உடன்படிக்கை அந்த வெளிநாட்டு ஒத்துழைப்பாளரால் மீறப்பட்டுள்ளதுடன் உற்பத்தி முடிவுக்கு வந்ததால் அந்த வியாபாரம் பாதிக்கப்பட்டது. அக் கம்பனியானது அதனுடைய உறுதிப்படுத்தப்பட்ட 18 வேலையாட்களுக்கு தொடர்ந்து சம்பளங்களைச் செலுத்தியதுடன் புதிய வியாபார ஒத்துழைப்பாளர் கண்டறியப்படும் வரை வேலைக்கு வரவேண்டாமென அவர்களுக்கு ஆலோசனையளித்தது. உற்பத்தி மீள ஆரம்பிக்கப்பட்ட பின்னர் அதே வேலையாட்கள் வேலைக்கு அமர்த்தப்படுவார்கள் என்ற உறுதிமொழியுடன் தற்காலிக மூடுகையொன்றுக்கான சபை தீர்மானமொன்று அண்மையில் எடுக்கப்பட்டது.

ரூனா-ஷியர் கம்பனி லிமிற்றெட் அச் சபையினால் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் சட்டவாந்தன்மை பற்றிய சட்ட அபிப்பிராயமொன்றைக் கோருகின்றது.

(அ) பொருத்தமான சட்டவாக்க ஏற்பாடுகளுடன் விசேடமாகத் தொடர்புறுத்தி அக் கம்பனிக்கு ஆலோசனை வழங்குக.

(ஆ) அதனது வியாபாரத்தை அக் கம்பனியானது ஏற்கனவே முழுமையாக மூடியிருந்தால் உமது அபிப்பிராயமானது வேறுபடுமா?

(இ) அக் கம்பனியைத் தாபிப்பதற்கான முதலீடானது அரசினால் முழுமையாக வழங்கப்பட்டிருந்தால் உமது விடையானது வேறுபடுமா?

*****

# UNIVERSITY OF COLOMBO, SRI LANKA

## FACULTY OF LAW

## Bachelor of Laws Examination, Year IV, 2017/2018

**LABOUR LAW**
(Three Hours)

Total Number of Questions: 07

Answer **any Four (04)** questions.
(Candidates will be penalized for illegible handwriting.)

1. The growth in the number of independent contractors means that many aspects of social security embodied in legislation is not applicable in the world of work.

   (a) Explain in your own words what is implied in the given statement.
   (b) Do you agree with the statement? Give reasons.
   Explain your answer with special emphasis on emerging trends in the form of employment and social security aspects applicable to the employment relationship in Sri Lanka.

2. Neeroga Hospitals (Pvt) Ltd is a well established chain of hospitals having many branches island-wide. The Board of Management consists of medical as well as administrative personnel. All appointments are made by the Board and every member of the medical staff of the hospital whether resident or consultant, fulltime or part-time are appointed by the Board. A resident medical officer at the pharmacy who misheard an instruction over the telephone sent a lethal drug (cocaine instead of procaine) which the surgeon had used on a patient with fatal results. The surgeon was assisted by two medical students undergoing training during their internship period.

(a) Discuss the liability of the Neeroga Hospitals (Pvt) Ltd arising in the employment sphere with regard to -

(i) The resident medical officer at the pharmacy;
(ii) The surgeon who administered the drug;
(iii) The two medical students undergoing training and assisted the surgeon at the theatre.

You are strictly advised to draw your special attention to the criteria the courts would rely on in deciding the employer's liability in the field of employment law.

(b) Would your answer be different if the surgeon who performed the surgery had been a visiting consultant who goes to the hospital on voluntary basis and has the freedom to work in other hospitals as well?

3. Gayathri Garments Ltd employs 350 female workers in its factory in Kandy. The company employed Saxon as a supervisor in the factory. The management of the company received a complaint from three female workers that "Mr.Saxon has made a joke with sexual connotations about our figures" The management terminated the services of Saxon for misconduct. According to the Human Resource Manager of the company, Saxon has worked for the company for about fifteen years, and promoted the business of the company. The Manager further stated that there are no other complaints about misconduct against him.

Saxon made an application to a Labour Tribunal and stated at the inquiry "I accept that I made a joke with sexual connotations when I saw the three girls wearing short skirts". He further pleaded before the tribunal "The termination is unjustified as the misconduct was not serious or habitual in nature. Even if the termination is justified, I am entitled to compensation on just and equitable grounds."

If you are the President of the Labour Tribunal who is hearing the application, how would you write the order. Give reasons for your answer.

4. ABC Co Ltd has several branches in the Western and Southern provinces. The company appointed X as its managing director by a letter of appointment dated 01-01-2010. X has considerable past experience in business management. On 01-01-2012, ABC Co Ltd required him to enter into a formal agreement of a contract of service for the post of chief executive officer of the company. Among the terms and conditions of employment set out in the appointment letter, his salary was stipulated as Rs 250,000/= per month and a provision was also included to pay a monthly allowance in lieu of the pension which he was to forfeit by accepting the said post.

X resigned from the said position with effect from 30-12-2016. In reply to a query made by X, the ABC Co contends that being the managing director, X belonged to a special category of employees and the company is not liable to pay his gratuity under the prevailing law.

Thereafter, X made an application to the Commissioner of Labour with a view to obtaining an order for his superannuation benefit.

Assume that your are the Commissioner General of Labour hearing the application of X

(a) (i) Explain the procedure the Commissioner should adopt.

(ii) Whether X is entitled to receive the terminal benefit he requested?

(iii) If so, explain the legal provisions applicable to X.

(iv) Clarify the method by which the benefit will be calculated and the amount of the benefit according to relevant legislative provisions.

(b) The company further alleges that X had taken unauthorized overseas private telephone calls amounting to over Rs 200,000/= and a loss has been caused to the company. Explain whether such claim has any relevance to the order you are about to make in respect of the application made to you by X.

5. Write a legal opinion on the following:

(a) Effectiveness of industrial arbitration as a mechanism for maintenance of industrial peace in Sri Lanka.

(b) Effectiveness of responses to promote non-discrimination in employment in Sri Lanka

6. At a National Human Resource Management Law Conference, a speaker representing an employers' organization stated:

"Sri Lankan labour statutes have provisions which unfairly favour trade unionists and the trade unions. This affects promotion of investment in Sri Lanka..."

Reflect on the above statement in the light of the principles in international instruments and the provisions of the labour statutes of Sri Lanka.

7. Tuna – Sheer Co Ltd is established with foreign collaboration to engage in producing fishing gear. The foreign collaborator had agreed to supply the raw materials and purchase the finished products. After several years of business, the agreement has been breached by the foreign collaborator and the business suffered due to the fact that the production came to standstill. The company continued to pay wages for its 18 confirmed workmen but advised them not to report for duty until a new business collaborator is found. Recently, a board decision was taken to effect a temporary closure with an undertaking to employ the same workmen upon resumption of production.

Tuna – Sheer Co Ltd seeks a legal opinion as to the legality of the decision taken by the Board.

(a) Advise the company with special reference to the relevant legislative provisions.
(b) Would your opinion be different if the company has already totally closed its business?
(c) Would your answer be different if the capital for the establishment of the company was wholly provided by the State?

*****